INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்




DOI:10.34256/irjt22318

OPEN ACCESS

# பெண்ணிய இறையியல் நோக்கில் புனித லூர்துமாதா அம்மானை

**லூ. அருண் பிரகாஷ் [அ, *], ஞா. பெஸ்கி [அ]**

[அ] தமிழாய்வுத்துறை, தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி-620002, தமிழ்நாடு, இந்தியா

# Punitha Lourdu Madha Ammaanai in the Perspective of Feminist Theology

**L. Arun Prakash [a, *], G. Beschi [a]**

[a] Department of Tamil, St. Joseph's College (Autonomous), Tiruchirappalli-620002, Tamil Nadu, India

* Corresponding Author: aruntvd102@gmail.com

Received: 28-02-2022
Revised: 19-05-2022
Accepted: 03-06-2022
Published: 06-07-2022

**ABSTRACT**

Theology is common for all the religions. Theology is defined as the study which analyses the relationship between God, World and human beings based on the concepts in the various religious books. Among the religions, Christianity proposes Christian Theology which expresses the presence of God through the life of Jesus Christ. Liberation Theology is known as one of the classifications of Christian theology which instructs the liberation thoughts through their Holy book 'Bible'. Feminist theology is one of the branches of liberation theology which deals with the liberation thoughts for the women suppressed in this society. According to this Feminist Theology, this study aims to analyse the minor literature 'Punitha Lourdu Madha Ammaanai' written by S.Yagappa Mudhaliyar.

**Keywords:** Theology, Christian Theology, Liberation Theology, Minor Literature, Intellectual Level

## முன்னுரை

இறைவனின் வெளிப்பாட்டைத் தங்கள் வாழ்வில் மக்கள் அனுபவித்து உணர்ந்து அதனடிப்படையில் தங்கள் வாழ்க்கை விழுமியங்களை அமைத்துக் கொள்ள உதவும் துறையே இறையியல் என்பதாகும். ஒரு தனிமனிதனை இறைவனோடு இணைக்க உதவும் ஒரு பாலமே இறையியல். இன்றைய சமூக, அரசியல் சூழலை அடியொற்றி விடுதலையை வலியுறுத்தும் வகையில் விடுதலை இறையியல் என்னும் ஒரு பிரிவு இன்று வளர்ந்து வருகிறது. சமுதாயத்தில் புறக்கணிக்கப்படுகின்ற, ஒடுக்கப்படுகின்ற மக்களின் சார்புநிலையில் ஆராய்வதாக விடுதலை இறையியல் அமைந்துள்ளது. இத்தகைய விடுதலை இறையியல் குறித்து விளக்குவதாகவும், விடுதலை இறையியலின் கிளைகளுள் ஒன்றாக வளர்ந்துள்ள பெண்ணிய இறையியலை அடியொற்றிப் புனித லூர்து மாதா அம்மானையை ஆராய்வதாகவும் இக்கட்டுரை அமைகிறது.

## இறையியல்

இறையியல் ஒவ்வொரு சமயத்திற்கென்றுள்ள வேத நூல்களை முதன்மையாகக் கொண்டே அமைகின்றது. இறையியல் என்பதை ஆங்கிலத்தில் Theology என்று அழைப்பர். Theology என்னும் ஆங்கிலச் சொல்லானது கிரேக்க மொழியில் Theologia என்னும் கூட்டுச்சொல்லில் இருந்து பிறந்தது. "இலத்தினிலும் Theologis என்னும் சொல்லே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. Theologia என்னும் கிரேக்கச் சொல் theos= கடவுள், Logos = சொல், உரை, விளக்கம் இயல் என்னும் இரு மூலச்சொற்களால் ஆனது."

என்ற கருத்தினைக் கிறித்துவ அறிஞர் பெருமக்கள் இன்றளவும் ஏற்றுக்கொள்கின்றனர் (Susai Manikkam, 2007).

“இறை+இயல் = இறையியல் என்பது கடவுளைப் பற்றிய ஆய்வினை மேற்கொள்வது. உளவியல் எங்ஙனம் மனித உள்ளத்தை ஆய்வு செய்கின்றதோ அதனைப் போன்றே இறைவன் என்னும் ஆய்வுப் பொருளினை முழுமையாக ஆய்வது இறையியல்” இதில் இறையியல் என்பது மனிதன் என்னும் உயிர்ப்பொருளைக் கடந்து அதனுள் உறைந்து கிடக்கின்ற ஒரு விதமான உணர்வினைத் தூண்டுவது என்பதாகும். இதில் கடவுள் என்ற சொல்லினுள் கடப்புநிலை, உள்ளுறை என இருநிலைகள் அடங்கியுள்ளன. இத்தகைய இறையியலுக்கென்று ஒருசில குறிக்கோள்கள் உள்ளன (Thomas Thangaraj, 2016). அவை பின்வருமாறு.

- இறையியலாளர் தம் சொந்த சமய மரபினை ஆழமாகப் புரிந்து கொள்ளல்.
- பிறரின் சமய மரபினை ஆழமாக அறிந்து கொள்ளல்
- ஒன்றுக்கு மேற்பட்ட சமயமரபுகளை ஒப்பிட்டு ஆராய்தல்
- தமது சமய மரபு ஏற்புடையதென ஆதாரங்களோடு நிறுவுதல்
- தமது சமயத்தைப் பரப்புவதற்கு அடிப்படை காணல்
- தற்கால உலக நிலைக்கும், பிரச்சனைகளுக்கும் சமய மரபின் ஒளியில் தீர்வு காண முயல்தல்
- ஒரு குறிப்பிட்ட சமய மரபின் வரம்புகளைக் கடந்து கடவுளைப் பற்றிய ஆய்வில் ஈடுபடுதல்” (John draviyam, 2008) என்பனவாகும்.

இறையியலினைப் பற்றிப் பல்வேறு அறிஞர் பெருமக்கள் கருத்துக்கள் பல கூறிவந்த நிலையில் மு. வரதராசன் அமெரிக்க நாட்டு உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு இறையியல் பற்றி ஓர் உரை நிகழ்த்தினார். “அதில் அவர் இறையியலானது எல்லா சமயத்திற்கும் பொதுவானது. மேலும் ஒரு தனிமனதனையும், இறைவனையும் இணைக்குமு் பாலமாகத் திகழ்கிறது” என்ற இறையியல் கருத்தினை மு. வரதராசன் மாணவர்களிடையே முன்வைக்கின்றார் (Thomas Thangaraj, 2016).

## இறையியலின் பணிகள்

மனித வாழ்க்கையில் மூன்று முக்கியக் கூறுகள் இருப்பதாக அறிஞர்கள் கூறுவர். அவை,

- சிந்தனை
- செயற்பாடு
- உணர்ச்சிகள்

என்பனவாகும். இவை மூன்றும் இணைந்த நிலையில் மனிதனின் வாழ்வு மேம்படுகின்றது. அவ்வாறு மேம்பட்ட மனித வாழ்வில் இறையியலுக்கென்று சில பணிகள் உள்ளன. அத்தகைய பணிகள் பற்றித் தமிழ்க் கிறித்தவ இறையியலாளர்களுள் ஒருவரான D.S. தங்கசாமி “கிறித்தவமும் தொழிலும்” என்னும் இறையியல் நூலில் எழுதியுள்ளார். அதில் அவர் இறையியல் நமது அனுதினப் பணியைச் சீராகவும் நேர்மையாகவும் கிறிஸ்துவின் வழிநின்று பணி ஆற்றுவதற்கு பெரிதும் உதவிடும். “இவ்வுலகில் கிறித்தவப் பண்புடனும், நம்பிக்கையுடனும் செயலாற்றுவது எங்ஙனமெனக் கற்றுக்கொள்ள விரும்புகின்றவர்களுக்குமே இந்நூல் எழுதப்படுகின்றது” என்று தனது நூலை அவர் தொடங்குகின்றார். இறுதியில் கிறித்துவர்கள் எந்தத் தொழிலைச் செய்தாலும் அதைக் கடவுளுக்கென்று செய்யும்படியாகவும் அதில் தங்களையே அர்ப்பணம் செய்வார்கள்” என்று தனது நூலை நிறைவு செய்கின்றார். இறையியல் சிந்தனையானது நமது அனுதின வாழ்க்கைக்கும் பெரிதும் துணை செய்யும் கருவியாகும்” மேலும் திருச்சபையின் வாழ்வில் பல கூறுகள் உள்ளன (Thomas Thangaraj, 2016). அவற்றை,

- வழிபாடு
- சான்று பகர்தல்

என இருவகையாகப் பிரிக்கலாம். இறைவனைப் பொருளுள்ள முறையில் வழிபடுவதற்கு இறையியல் துணை செய்கின்றது. “திருச்சபையின் இரண்டாவது சிறப்புக்கூறு சான்று பகர்தல் அல்லது அருட்பணியாகும். திருச்சபையின் அருட்பணி புதுப்புதுத் தோற்றங்கள் பெற வேண்டியுள்ளது. எனவே பணிபுரியும் சூழல்கள் மாறுபடுகின்றன. எனவே பொருத்தமான முறையில் பணிபுரிவதற்குத் திருச்சபை தனது பணியைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்தல் வேண்டும். இந்த சிந்தனைப் பணியை நிறைவேற்றுவது இறையியலின் கடமை” (Thomas Thangaraj, 2016).

இறையியலின் பணி என்பது திருச்சபையோடு மட்டும் நின்றுவிடக்கூடாது. அது அனைத்துச் சமுதாயத்திலும் செயல்பட வேண்டியதொன்று. இறையியலின் சமுதாயப் பணி பற்றி அமெரிக்க ஐக்கிய நாட்டின் தலைசிறந்த இறையியலாளர்களில் ஒருவரான “கோர்டன் காஃப்மேன் அவர்கள் In Face of Mystery என்ற தனது நூலில் இவ்வாறு கூறுகின்றார். என் கருத்துப்படி இறையியலே எங்ஙனம் கருத வேண்டும் என்றால் அது ஒரு உரையாற்றல் (Monologue) அன்று. உண்மையில், ஓர் உரையாடல். பெரும் புதிராய், இரகசியமாய் அமைந்துள்ள கடவுளைப் பற்றிச் சிந்திப்பதில் நாம் அனைவரும் இணைந்து நிற்கின்றோம். எனவே நாம் ஒருவருக்கொருவர் வினா எழுப்ப வேண்டும். ஒருவரை ஒருவர் திறனாய்வு செய்ய வேண்டும். ஒருவருக்கொருவர் உதவி செய்திட வேண்டும். இறையியலின் எல்லா குரல்களுக்கும் இடமளிக்க வேண்டும். எல்லா குரல்களையும் திறந்த மனதோடு கேட்க வேண்டும்.” இவ்வாறு இறையியலுக்கென்று உள்ள பணிகள் காலந்தோறும் மாறுபடுகின்றன (Thomas Thangaraj, 2016).

## இறையியலின் வகைகள்

இறையியலானது காலந்தோறும் மாறுபடுகின்ற நிலையில், அவை பல்வேறு நிலைகளில் வகைப்படுத்தப்படுகின்றன. அவை, “விவிலிய இறையியல் (Biblical Theology), பணிசார்ந்த இறையியல் (Functional Theology), பெண்ணிய இறையியல் (Feminist Theology), விடுதலை இறையியல் (Liberation Theology), சிறார் இறையியல் (Child theology), ஆன்மீக இறையியல் (Spiritual Theology), முறையான இறையியல் (Systematic theology), அறிக்கை இறையியல் (Report theology), மன்னிப்பு இறையியல் (Apologetic Theology), உரையாடல் இறையியல் (Dialogical theology), செயல்முறை இறையியல் (Process theology), வரலாற்று இறையியல் (Historical Theology)” என்பனவாகும் (Gnamuthu pilenthiren, 1989). இத்தகைய இறையியலின் வகைகளுள் ஒன்றாக மானுட விடுதலையை இலக்காகக் கொண்டு ஆராய்கின்ற விடுதலை இறையியல் அமைந்துள்ளது.

## விடுதலை இறையியல்

விடுதலை இறையியல் என்பது காலனி ஆதிக்க நாடுகள் என்றழைக்கப்படுகின்ற இலத்தீன் அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ள கிறித்தவ இனமக்களின் எழுச்சிக்காக உருவாக்கப்பெற்றதே ஆகும். விடுதலை இறையியலானது 500 ஆண்டு கிறித்ததவப் பாரம்பரியத்தைக் கொண்டது. மேலும் விடுதலை இறையியலானது திடீரென உதித்தது அல்ல. அது வரலாற்றின் ஒவ்வொரு காலகட்டத்திலும் தனக்கான மாறுதல்களைப் பெற்று வளர்ந்து வந்துள்ளது. “அர்ஜென்டினாவின் இறையியலார் என்ரிக்டசல் விடுதலை இறையியலைப் பல்வேறு நிலைகளில் பகுத்துக் கூறியுள்ளார். அவை பின்வருமாறு.

“கி.பி.1511 முதல் 1553 வரை ‘இறைவாக்கு இறையியல்’. ஸ்பானிய போர்த்துகீசிய ஆக்கிரமிப்பாளர்களின் கொடுமையை எதிர்த்துத் தொல்குடி மக்கள் சார்பாகச் சில மறைபரப்பாளர்கள், நற்செய்தி அறிவிப்பாளர்கள் குரல் கொடுத்தனர். குறிப்பாக தொமினிக்கன் துறவி மென்டேசினோஸ், பார்த்தலேமேயு.

1553 முதல் 1803 வரை 'காலனிய இறையியல்'. திருச்சபை ஏழைகளுக்கு எதிரான அநீதிகளை எதிர்க்காதது மட்டுமல்ல, அதை ஆதரித்தது. அநீதியை மூடி மறைக்கும் புனிதப் போர்வையாக இறையியல் பயன்பட்டது.

1831 முதல் 1930 வரை 'பழைமை வாத புதுக்காலனிய இறையியல்'

1930 முதல் 1962 வரை 'மிதவாத (அ) முற்போக்கு இறையியல்" (Peri, 2010)

இத்தகைய காலகட்டத்தில் தான் கத்தோலிக்கச் செயற்பாட்டுக் குழுக்கள் உருவாயின. 1960க்குப் பிறகான இறையியலை விடுதலை இறையியல் என்று அழைக்கின்றனர். விடுதலை இறையியலானது இங்கு ஏழு நிலைகளில் வளர்ச்சியடைந்துள்ளது. அவை காலச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாறுபட்டு அவை மூன்று நிலைகளாக மாற்றியமைக்கப் பெற்றுள்ளன.

## விடுதலை இறையியலின் மூன்று நிலைகள்

### அறிவராய்ச்சியின் நிலை

0.1. ஆராய்ச்சி நிலையானது இம்மியும் பிசகாது விளக்கமானது.

0.2. தருக்க நிலையானது, புலமை நிரப்பியதோடு மட்டும் நில்லாது கோட்பாடு சார்ந்தது.

0.3. இறையியலை குருமடங்களிலும் இறையியல் கல்வி நிறுவனங்களிலும் பயிற்றுவிக்கின்றனர்.

0.4. இறையியலை செயல்படுத்துபவர்களாக இறையியலாளர்களும் பேராசிரியர்களும் திகழ்கின்றனர்.

### மேய்ப்பு நிலை

0.1. ஆராய்ச்சி நிலையானது செயல்பாடுகளோடு அகஒன்றிப்பும் உடையது.

0.2. தருக்க நிலையானது தெளிவான செயல்பாடுகளை உடையது.

### வெகுசன நிலை

0.1. இதில் ஆராயச்சி நிலையானது வெகுசன மக்களிடையே விரைவில் சென்றடையக் கூடியது.

0.2. தருக்க நிலையானது வாழ்வியல் சார்ந்த செயல்களில் இறைவனின் அருளைப்பெற வழி வகை செய்கிறது" (Thomas Thangaraj, 2016)

இறையியல் எவ்வாறு கால நிலைகளுக்கு ஏற்ப மாறுபட்டுப் பல்வேறு வகையாகத் தோன்றினவோ அதனைப் போன்றே விடுதலை இறையியலிலும் கால நிலைகளுக்கு ஏற்ப அதன் வகைகள் உருவாகின. விடுதலை இறையியல் காணப்பெறுகின்ற வகைகள் பின்வருமாறு அமைகின்றன.

- பெண்ணிய இறையியல்
- கருப்பர் இறையியல்
- ஆசிய விடுதலை இறையியல்
- மீட்பின் இறையியல்
- இந்தியாவில் விடுதலை இறையியல்

என விடுதலை இறையியலானது காலந்தோறும் மாறுபாடு கொண்டு அமைகின்றன. இதில் முதன்மையானதாகக் கூறப்பெற்றுள்ள பெண்ணிய இறையியல் அடிப்படையில் புனித லூர்துமாதா

அம்மானை ஆராய்வதன் மூலம் அம்மானையில் இடம்பெற்றுள்ள பெண்விடுதலைச் சிந்தனைகளைக் கண்டறியமுடியும்.

## பெண்ணிய இறையியல்

இறையியல் ஆனது எல்லா சமயத்தவருக்கும் பொதுவான ஒன்றாகும். அமெரிக்காவிலுள்ள பெண் இயக்கம் சார்ந்த மக்கள் நடத்திய போராட்டத்தின் விளைவால் திருச்சபையில் ஏற்பட்ட பெரிய தாக்கமே பெண் விடுதலை இறையியலுக்கான முதற்காரணியாகும். 1898இல் எலிசபெத் கோடி ஸ்டான்டன் வெளியிட்ட 'பெண்களுக்கான விவிலியம்' என்ற நூலைத்தான் பெண்ணிய விடுதலை இறையியலின் தொடக்கமாகக் கூறுகின்றனர். இதில் பெண்கள் பற்றிய விவிலியக் கருத்துக்கள் தனியாக இடம்பெற்றுள்ளன. மேலும் ஸ்டாக்டன் அவர்கள் பெண்ணிய இறையியல் பற்றிய தமது கருத்துக்களை முன்வைக்கின்றார்.

1923இல் பெண் விரிவுரையாளர் ஒருவர் மதமும் அவளும் என்ற விமர்சனப் பார்வையில் ஒரு புத்தகத்தை எழுதினார் அதன்பின் "1964இல் பெர்டிக் பிரையன் எழுதிய பெண்ணியப் புதிர் பெண்களிடையே மாபெரும் அலையைத் தோற்றுவித்தது". இதன் விளைவால் பல்வேறு இயக்கங்கள் தோன்றின (Gnana muthu pilenthiren, 1989).

இதனை அடிப்படையாகக் கொண்டு 1979இல் ஆயிரக்கணக்கான பாடங்களும், முன்னூருக்கு மேற்பட்ட பட்டப்படிப்புகளும் உருவாயின. அதனைத் தொடர்ந்து திருச்சபையில் திருஅவையின் பணிகுறித்து பெண்ணியம் சார்ந்த கருத்துக்கள் பல்வேறு நிலைகளில் கூறப்பட்டுள்ளன. 1975இல் பெண்களுக்கான குருத்துவ நிலைப்பாடு குறித்த மாநாடு கத்தோலிக்க அருட்சகோதரிகள் மற்றும் பெண்களால் இணைந்து நடத்தப்பட்டது. டெட்ராய்டில் நடந்த மாநாட்டில் ஏறக்குறைய 1300க்கும் அதிகமான பெண்கள் கலந்துகொண்டனர். இந்த மாநாடு தான் பணிக்குருத்துவத்தில் பெண்களுக்கான பிரச்சனையை முன்வைத்தது.

1972 முதல் 1975 வரை உள்ள காலகட்டத்தில் குருத்துவக் கல்லூரிகள் அதிகமாயின. அதில் பெண்களும் அதிகம் கல்வி பயின்றனர். இதனைத் தொடர்ந்து 1983 செப்டம்பரில் அமெரிக்காவிலுள்ள பாஸ்டன் நகரில் இறையியல் மையமானது உருவானது. இங்குப் பெண்ணிய விடுதலை இறையியல் சார்ந்த சிந்தனைகளோடு ஆன்மீகச் செயல்பாடுகள் மற்றும் பணி வாழ்வு குறித்து ஓராண்டு காலப் பாடத்திட்டம் உருவாக்கப்பட்டது.

## பெண்ணியக் கருத்துக்கள்

புனித லூர்து மாதா அம்மானையில் பெண்ணியக் கருத்துக்கள் பரவலாகக் காணப்படுகின்றன. பெண்ணைத் தெய்வநிலைக்கு உயர்த்திப் பார்க்கின்ற மரபுநிலையிலான மிதவாத நோக்கிலே கருத்துகள் காணப்படுகின்றன. புனித லூர்து மாதா அம்மானையில் அன்னை மரியாவின் மேன்மையினையும், மாட்சியினையும் எடுத்துரைப்பதோடு ஏழைப் பெண்ணான பெர்னதத்திற்குக் காட்சியளித்துள்ளமை பற்றியும் எடுத்துரைக்கப்பெற்றுள்ளது. மேலும் பெர்னதெத் என்னும் ஏழைக்குடும்பத்தைச் சார்ந்த பெண் ஒடுக்கப்பட்ட முறை பற்றியும் பின்னர் அன்னையின் மாட்சியினை அவள் அறிந்து கொண்டமை பற்றியும் தெளிவுறக் கூறுவதாகப் புனித லூர்து மாதா அம்மானை அமைந்துள்ளது.

## புனித லூர்து மாதா அம்மானை

1987ஆம் ஆண்டு இயற்றப்பட்ட புனித லூர்துமாதா அம்மானையில் அன்னைக்கென்று சிறப்புப்பாயிரம் பாடப்பெற்றுள்ளதோடு, காப்பு, கடவுள் வாழ்த்து, அவையடக்கம் முதலானவை பாடப்பெற்றுள்ளன. இதோடு மரியாவிற்கு வணக்கமும், சூசையப்பருக்கு வணக்கமும் பாடப்பெற்றுள்ளன.

லூர்துமாதா அம்மானையானது எஸ். யாகப்பரால் (1987) இயற்றப்பெற்றது. பிரான்சு நாட்டின் பிரெனிஸ் மலை அடிவாரத்தில் லூர்து என்னும் மலை உள்ளது. அங்கு பிரான்சிஸ் சுபிருசு என்பவருக்கு மகளாகப் பிறந்த பெர்னதெத்திற்கு லூர்து நகரை அடுத்த நசபியேல் குன்றின் மீது அன்னையாளவள் காட்சியளித்தாள். இதில் லூர்து நகரில் அன்னையானவள் காட்சி தருகின்ற நிகழ்வினையும் அதில் 18வது முறை காட்சி தருகின்ற போது அன்னையானவள் பெர்னதெத்திடம், 'நானே அமல உற்பவி' எனக் கூறுகின்ற அரிய நிகழ்வினையும் இந்த அம்மானையானது கவிதை நயத்தோடு விளக்குகின்றது. அன்னையின் மாட்சி பற்றியும், அன்னை மரியாள் செய்த புதுமைகள் பற்றியும் கூறுவதாக இவ்வம்மானை திகழ்கின்றது. இந்த அம்மானை 755 அம்மானைக் கண்ணிகளையும், 12 விருத்தப்பாவினையும் கொண்டுள்ளது.

## பெர்னதெத் ஒடுக்கப்படுதல்

"மின்னல்கொடி போன்றவளா அமதகுபெர்னதெத் தேசொலித்து

உன்னிப் பரவசமா யுறும்வேளை யுயர் டாக்டர்

துசஸ்து ரைகரத்தைச் சோதித்தார் வியாதிகுணம்

அசுசியென்று மில்லையென வதிசயித்தார் அம்மானை" (Yagappa muthaliyar, 1987)

1858ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11ஆம் நாள் விறகினை எடுக்கச் சென்ற பெர்னதெத் மற்றும் அவரது சகோதரிக்கும் முதலில் புனித மரியாள் காட்சி தந்தாள். அன்னையின் காட்சி பற்றி பெர்னதெத் தன்னைச் சுற்றியுள்ள தோழிகளிடமும் ஊர் மக்களிடமும் கூறினாள். அவள் கூறியதை யாரும் நம்பவில்லை. அவளுக்குத் தீய சக்திகள் எவையேனும் பிடித்துவிட்டதோ என எண்ணிக் காட்டிற்கு விறகு எடுக்கச் செல்ல அவளது பெற்றோர்கள் அனுமதி மறுத்தனர். அவளோ பெற்றோரின் கண்டிப்பினை மீறியவளாய் காட்டிற்குச் சென்றாள். காட்டிற்குச் சென்று குகையிலே காட்சி தருகின்ற அன்னையானவளைக் காண முற்படுகின்ற போது அவரோடு சென்றவர்கள் சிலர் கண்டித்தனர். இங்குப் பெண் என்பதால் பெர்னதெத் கூறிய கருத்துக்கள் இந்தச் சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. மேலும் அக்கால மக்களிடையே பெண்ணைத் பேய் போன்ற தீயசக்திகள் எளிதில் பற்றிக்கொள்ளும் என்னும் அச்சம் சார்ந்த கூடநம்பிக்கை நிலவியதையும் இக்கவிதை அடிகள் புலப்படுத்துகின்றன. இங்கு ஒரு பெண்ணின் சொற்களை அக்காலச் சமூகம் அங்கீகரிக்கவில்லை என்பது தெளிவாகிறது.

## லூர்து மாதா மாட்சிமை

"குவித்து வணங்கி நின்று குலவு முகமலர்ந்து

உவந் தமலோற் பவமெனநாம் உற்ற திருப்பெயரே

நமக்கிங்கே கோவிலொன்று நன்றாகக் கூட்டுவது

எமதாசை யென்றுரைத்தான் இங்கிதமார் ஞானிமரி" (Yagappa muthaliyar, 1987)

அன்னை மரியாள் மார்ச்சு 24ஆம் நாள் பெர்னதெத் நாளை காலை கட்டாயம் அந்தக் குகைக்குச் சென்று அன்னை மரியாளைக் காணவேண்டும் என்ற உள்ளுணர்வோடு உறங்கச் சென்றாள். மறுநாள் காலையில் பெர்னதெத் எழுந்து அன்னை மரியாள் காட்சி தந்த குகையை நோக்கிப் பயணமானாள். அங்கு அவள் வழக்கம் போல் செபமாலை செய்து கொண்டிருந்த போது அன்னை மரியாள் அவளுக்குக் காட்சி தந்தாள். அப்பொழுது பெர்னதத் அன்னை மரியாளிடம் பெயர் என்னவென்று வினவுகின்றாள். அதற்கு அன்னை மரியாள் 'நானே அமல உற்பவி' எனக் கூறிவிட்டு அவ்விடத்தை விட்டு அகன்றாள். அதன் பின் அன்னை மரியாள் பெர்னதெத்திற்குக் காட்சி அளித்த செய்தி அருகாமையில் உள்ள நகர் முழுமையிலும் பரவியது. அதனையறிந்த மக்கள் கூட்டம் கூட்டமாக அவ்விடத்தை நோக்கிப் பயணமாயினர்.

இதில் லூர்து அன்னையானவள் தனது மாட்சியை பெர்னதத் வழியாக உலகிற்கு அறிவித்ததோடு மட்டுமல்லாது அந்தப் பெண்ணையும் உலகறியச் செய்தாள்.

## முடிவுரை

இறையியலானது பல்வேறு நிலைகளில் மாறுபட்டு இருக்கின்ற போது, அதில் விடுதலை இறையியலில் மட்டும் சற்றே அதிகப்படியான விடுதலை உணர்வினைச் சார்ந்த கருத்துக்கள் இடம்பெறுகின்றன. மேலும் விடுதலை இறையியலின் மற்றொரு உட்பிரிவாக அல்லது அங்கமாகத் திகழ்வது பெண்ணிய இறையியல் ஆகும். 1975களில் பெண்களுக்கான குருத்துவ நிலைப்பாட்டினை எடுத்துக் கூறியதோடு பெண்களுக்கான குருத்துவ நெறிமுறைகளையும் வகுத்தது. பெண்ணிய இறையியலின் பார்வையில் ஆராய்ந்தால் புனித பெர்னதெத் காலந்தோறும் இச்சமூகத்தால் ஒடுக்கப்படும் பெண் அடையாளமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளார். பெண்ணின் கருத்துகள் ஏற்கப்படாத சூழலிலே இந்த அம்மானையில் பெர்னதெத்தின் கருத்துகளும் புறக்கணிக்கப்பட்டுள்ளன. ஆனால் புனித லூர்து அன்னையை மரபுநிலையில் உயர்த்தி உரைக்கும் சமயம் சார் பின்னணியையும் இப்படைப்பில் உணரமுடிகிறது.

## References


Gnana Muthu Pilenthiren, (1989), Theology Of liberation, Yallpaanam, Srilanka.

John Thiraviyam, (2008), Tamil Search is a Theology, Sivakasi, India.

Peri, (2010) Viduthalai Suvadukal, Anal Publications, Karumandapam, Thiruchirappalli, India.

Punitha Lourdu madha ammaanai, Arockia Publication, Tiruchirappalli, India.

Susai Manikkam, A., (2007) A Very Brief introduction of Theology, Chennai, India.

Thomas Thangaraj, M., (2016) Chiruthuva Iraiyial, Tamilnadu Theological Society, Madurai, India.



**Funding:** No funding was received for conducting this study.


**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License